**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.3/2017**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.2 கோவிந்தராஜுலு, வயது 78 , த/பெ துரைசாமி**

**நேரம் - 12.25**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 3 மனைகள் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது 5 மனைகள் என்பதற்கு பதிலாக 3 மனைகள் என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேப்போல் கிழக்கு, மேற்கு 15 அடி, வடக்கு தெற்கு 33 அடி என உள்ளது என்றால் சரிதான். அதேப்போல் பஜனை கோயில் தெருவில் கிழக்கு பக்கம் உள்ள முதல் மனை ராஜேந்திரனுடையது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் மனை ராஜேந்திரன் பெயரில் உள்ளதற்கு ஏதேனும் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் 30 வருடங்களுக்கான வில்லங்கத்தை பார்த்துள்ளேன். மேற்படி வில்லங்கத்தை நாங்கள் நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

2. அதேப்போல் ராஜேந்திரன் பெயரில் உள்ள மனை கிழக்கு, மேற்கு 15 அடி, வடக்கு தெற்கு 33 அடி என உள்ளது என்று கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. ராஜேந்திரன் மனை ஆவணத்தின் தேதியை நான் குறிப்பிடவில்லை என்றால் ராஜேந்திரனும், தேவேந்திரன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து மனையை பிரித்து கொண்டார்கள். மேற்படி விவரங்களை நான் என் பிரமாண வாக்குமூலம் மற்றும் பி.வா.சா.1 கெஜலட்சுமியின் பதில் உரையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தேவேந்திரன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து மனையை பிரித்து கொண்டது எந்த வருடம் என்றால் 1994 ஆகும்.

3. 1994ம் வருடத்திற்கு முன்பு தேவேந்திரன் மேற்படி இடத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நானே தேவேந்திரன் கூட்டாக மனையை பிரித்து கொண்டதாக கூறியிருப்பதால் அவர் மனையை அனுபவித்து இருப்பார் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 வட்டாட்சியர் அலுவலகத்தால் தேவேந்திரனுக்கு 1993ம் வருடம் தாவா சொத்திற்காக வழங்கப்பட்ட பட்டா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு 1992ம் வருடம் பொய்யான பட்டாவை காண்பித்து மேற்படி பட்டாவை வாங்கியுள்ளார். மேற்படி பொய்யான பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

**குறிப்பு - பி.வா.சா.2 சாட்சி வாதி வழக்கறிஞர் கேள்விகளுக்கு ஒத்துழைக்காமல் தானாக சங்கதிகளை பற்றி கூறியதால் வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 12.40**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni